யாப்பு திருத்த குழு 2022 ( சிறி நவரட்னம், லோகதாஸ் பத்மநாதன், சுகிர்தா ஜெய்கரன், யூலியானா அருள், தினேஷ் மகேந்திரலிங்கம்)

# பிரிவு 1

அ ) பெயர் :- நோர்வே தமிழ்ச்சங்கம்

ஆ ) தோற்றம் :- 14.01.1979

இ ) கொடி :- நீள் சதுர அமைப்பில் வெள்ளை ,கருநீலம் ,சிவப்பு ஆகிய மூன்று நிறங்களையுடையது

ஈ ) இலட்சனை :- சேர, சோழ, பாண்டிய சின்னங்களாகிய அம்புவில்,மீன் ,புலி( நீல நிறத்தில்) ஆகிய மூன்றினையும் இணைக்கும் சக்கரத்தின் நடுவில் முழுச் சூரியன் சிவப்பு நிறத்தில் அமைந்திருக்கும். சூரியனின் கதிர்களின் மேலே "தமிழ் " என்றும் கீழே "வாழ்க" என்றும் கீழ் பகுதியில் "நோர்வே தமிழ் சங்கம் , Norway Tamil Sangam " ஆகியவை நீல நிறத்தில் என்றும் ஒன்றன் கீழ் ஒன்றாக அமைந்திருக்கும்.

உ ) சங்ககீதம்:- ஹம்சத்வனி இராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்த “நோர்வே தமிழ்ச் சங்கம் வாழிய” என்று ஆரம்பிக்கும்.

# பிரிவு 2

அங்கத்துவம்

இச் சங்கத்தில் நோர்வே வாழ் தமிழர்களும் மற்றும் தமிழ்மொழி, கலை, கலாச்சார, நாகரிகம் மற்றும் விளையாட்டு ஆகியவற்றில் ஆர்வம் உள்ளவர்களும் அங்கத்துவம் பெறலாம்.

மீள் அங்கத்தராவதற்கு - கையேடு §3 அங்கத்தவர்கள் பகுதியை பார்வையிடவும்

.

- நோர்வே தமிழ் சங்கத்தில் அங்கத்தவராக இணைவதற்கு

- நோர்வே தமிழ்ச் சங்கத்தின் சட்டங்களையும், முடிவுகளையும் ஏற்றுக் கொள்ளல்

- நோர்வே தமிழ்ச் சங்கத்திற்கான அங்கத்துவ சந்தாப் பணம் செலுத்துதல்.

- வருட சந்தா செலுத்திய நாளில் இருந்து அங்கத்துவம் செல்லுபடியாகும்.

-

## பிரிவு 3

### நோக்கம்

அ ) நோர்வே வாழ் தமிழர் மத்தியில் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துதல்.

ஆ ) தமிழர்களுக்கும் நோர்வே வாழ் மக்களுக்குமிடையில் சுமூகமான உறவை வளர்த்தல்

இ ) தமிழர் கலை, கலாச்சார, நாகரிகம் மற்றும் விளையாட்டுக்களை பேணிப் பாதுகாத்தல்.

ஈ ).நோர்வே வாழ்த் தமிழர்களின் நலன்களைக் கவனித்தல்.

உ ) மனித உரிமைகளுக்கு ஆதரவு வழங்குதல்.

## பிரிவு 4

### அமைப்பு

இச்சங்கம்

அ ) பொதுச்சபை
ஆ ) நிர்வாகக் குழு
இ ) செயற்குழு
ஈ ) உபகுழு என 4 அமைப்புக்களைக் கொண்டுள்ளது.

**அ )** பொதுச்சபை
பொதுச்சபையானது அங்கத்துவத் தகுதியுடைய அனைத்து உறுப்பினர்களையும் உள்ளடக்கும், பொதுச்சபையே இச்சங்கத்தின் நோக்கம் , கொள்கை, செயற்திட்டங்கள் ஆகியவற்றை உருவாக்கும் மிக உயர்ந்த அமைப்பாகும்.

**அ) 1.** பொதுச்சபையின்பணிகள்

- ஆண்டு அறிக்கையை ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளல்
- பரிசீலிக்கப்பட்ட  கணக்குகளை ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளல்.
- கிடைக்கப்பெற்ற முன்மொழிவுகளைப் பெற்று ஆராய்தல்

- வரவு செலவு திட்டத்தை ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளல்
- தேர்வு
  - நிர்வாக உறுப்பினர்கள்
  - கணக்காய்வாளர்
  - இணக்கசபை உறுப்பினர்கள்
  - தேர்தல் குழு
  - குழுக்கள்

அ)**2.** அவசரப் பொதுக்கூட்டம்
நிர்வாகம் முடிவு செய்யும் போது அல்லது குறைந்தபட்சம் 1/3 உறுப்பினர்கள் கோரும் போது அவசர பொதுக்கூட்டம் கூடப்படலாம் (விதிவிலக்கு - அசாதாரண சூழ்நிலைகளில்)

முன்னறிவிப்பு குறைந்தபட்சம் 14 நாட்களுக்கு முன்வழங்கப்பட்டு, சாதாரண வருடாந்திரக் கூட்டங்களைப் போலவே செயற்படல் வேண்டும்..
அவசரப் பொதுக்கூட்டம் அறிவிக்கப்பட்ட விடையத்தை மட்டுமே கையாள வேண்டும்.

ஆ ) நிர்வாகக் குழு :- இக்குழுவானது தலைவர் , உபதலைவர் மற்றும் செயலாளர் உட்பட 11 பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவாகும். ( 8 நிர்வாக உறுப்பினர்கள்)

இ ) செயற்குழுகள் :- நிர்வாகத்தினால் உருவாக்கப்படும் செயற்பாடுகளுக்காக நிர்வாகத்தினால் தெரிவு செய்யப்படும் குழு. (செயற்பாட்டுக்கு ஏற்றவாறு உறுப்பினர்களின் எண்ணிக்கை மாறுபடலாம்)

உபகுழுகள் :- கணக்குப்பரிசோதகர்குழு, தேர்தல் குழு,இணக்கசபை,மாதர்குழு

இணக்கசபை :- இக் குழுவானது மூன்று பேரைக் கொண்டதாக அமையும்.
வருடாந்த பொதுச்சபை மூலம் தேர்வு செய்யப்படல் வேண்டும்.
**(2022 இல் யாப்புக்குழுவால் பரிந்துரைக்கப்படுகிறது)**

## பிரிவு 5

## சங்கத்தின் யாப்பு திருத்தம்

யாப்புத் திருத்தம் நிகழ்ச்சி நிரலில் அறிவிக்கப்பட்ட பின்னர் வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் அல்லது அவசர பொதுக் கூட்டத்திற்கு சமூகமளித்த 2/3 பகுதி அங்கத்தவர்கள் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் மட்டுமே யாப்பு திருத்தம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## பிரிவு 6

### சங்க கலைப்பு

சங்கத்தைக் கலைத்தல் என்னும் தீர்மானம், 2/3 பெரும்பான்மையுடன், தொடர்ச்சியாக இரண்டு பொதுக் கூட்டங்களில் தீர்மானிக்கப்பட வேண்டும். இந்த இரண்டு கூட்டங்களும் குறைந்தது மூன்று, ஆகக்கூடியது ஆறு மாதங்களுக்குள் நடாத்தப்பட வேண்டும். அப்படியாகப் பொதுக் கூட்டம் எதிர்ப்பின்றிக் கலைப்பதாகத் தீர்மானிக்கப் பட்டால் அடுத்த பொதுக்கூட்டம் கூட்டப் படாமலே சங்கம் கலைக்கப் படலாம்

மற்றைய , நோர்வே தமிழ்ச் சங்கத்தைப் போலவே ஒரே நோக்கத்தைக் கொண்ட நிறுவனங்களுடன் இணைத்தல் கலைத்தல் ஆகக் கொள்ளப்படாது

கலைக்கும் பட்சத்தில், பொதுச்சபையால் தீர்மானிக்கப்படும் சங்கத்தின் நோக்கமுடைய, நலன்புரி அமைப்பிற்கு உடைமைகள் வழங்கப்படல் வேண்டும்